1992 - பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 06 திங்கட்கிழமை (21-12-1992) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 25

# நானாட்டானில் அதிரடித் தாக்குதல்

# 10 படையினர் பலி! 40 பேர் காயம்!!

## முன்னணி காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் பாய்ச்சல்

கொழும்பு, டிசம்பர் 21

**மன்னார் மாவட்டம் நானாட்டானில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களின் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் பத்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர். நாற்பது சிப்பாய்கள் வரை படுகாயமடைந்தனர்.**

கொழும்பில் கூட்டுப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

நானாட்டான் பாதுகாப்பு வலயத்தில் — நானாட்டான் சந்தியில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 45 நிமிட நேரம் நடைபெற்ற இச் சண்டையின் போது ஏறத்தாழ இரு நூறு போராளிகளைக் கொண்ட விடுதலைப் புலிகளின் அணி அதிரடித் தாக்குதலை நடத்தியதாக ஏஜென்ஸிச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இராணுவத்தினர் அப்பகுதியைக் கைப்பற்றுவதற்கு முன்னேறிக் கொண்டிருந்த போது படையினரின் நடுவே விடுதலைப் புலிகள் ஊடுருவி இத்தாக்குதலை நடத்தினர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-த-எ-3-6)

## புலிகளின் அதிரடிகளை எதிர்கொள்ள புதிய பாணி!

லண்டன், டிச. 21

இராணுவ நிலைகளில் உள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்தும் அதிரடித் தாக்குதல்களை எதிர் கொள்வதற்காக படையினர் புதிய உத்திகளைக் கையாள்வதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. பி.பி.ஸி. இத்தகவலை நேற்றிரவு வெளியிட்டது.

புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடும் எனக் கருதப்படும் பிரதேசங்களைச் சூழ கிரனேட் மாலைகளை (Grenade Necklace) படையினர் புதைத்து வைப்பதாகவும்—

இவற்றை எறிபொருள் ஒன்றின் மூலம் ஒரே சமயத்தில் வெடிக்க வைத்து அப்பிரதேசத்தைச் சூழவிருக்கும் எதிரிகளை அழிக்க முடியும் எனப் படையினர் கருதுவதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

இத்தகைய கிரனேட் மாலைகளையும், பீரங்கிகள், மோட்டார் ஷெல்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தியே நானாட்டானில் புலிகளின் பெரும் அணி நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வமதக் குழுவின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டது!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முன் முயற்சிகளில் ஈடுபட்ட சர்வமதக் குழு தனது யாழ்ப்பாண விஜயத்தை பின்போட்டிருப்பதாக யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

சர்வமதக் குழுவினர் ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த திட்டமிட்டிருந்தனர்.

கிளாலிப் பாதையூடாக பௌத்த குருமார் யாழ்ப்பாணம் வருவதற்கு கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்காததாலும்—

கொழும்பில் உள்ள அரச உயர்பீடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் போதிய அக்கறை காட்டவில்லை எனச் சர்வமதக் குழு கருதுவதாலும் —

தனது விஜயத்தை குழு பின்போட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சர்வமதக் குழுவில் இடம் பெற்று இங்கு வருகை தரவிருந்த வண. பிதா அலெக்சாண்டர் இத்தகவலை யாழ்ப்பாணத்திற்குத் தெரியப் படுத்தி உள்ளார் [உ-3]

## பாரதீய ஜனதா தலைவர் வாஜ்பாய் சாகும்வரை உண்ணா நோன்பு!

### நேற்றுக் கைதாகி விடுவிக்கப்பட்ட

புதுடில்லி, டிச. 21

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் இதுவரை கைது செய்யப்படாமல் இருந்த அடல் பிஹாரி வாஜ்பாய் நேற்றுக் கைது செய்யப் பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்டவுடன் சாகும் வரை உண்ணாவிரதம் ஒன்றை அவர் ஆரம்பித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் தொண்டர்களைக் காரணமின்றிக் கைது செய்வது —

கட்சியின் நடவடிக்கைகள் மீது அடக்குமுறையைப் பிரயோகிப்பது போன்ற செயல்களில் மத்திய அரசு ஈடுபட்டதாக தெரிவித்தும், அதனை கண்டித்தும் பாரதீய ஜனதாக் கட்சி நேற்று இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டப் பொதுக் கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது

இதன்படி —

புதுடில்லியில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற வாஜ்பாய் உட்பட பலபாரதீயஜனதா தலைவர்கள் தொண்டர்களுடன் கட்சி அலுவலகத்தில் இருந்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை இந்திய அரசு தடை செய்தது சரியே!

### நடுவர் மன்றம் தீர்ப்பு

புதுடில்லி, டிச. 21

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடைவிதிக்கப்பட்டது சரியானது என்று நடுவர் மன்றம் தீர்ப்பளித்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் சட்ட விரோதமான அமைப்பு என்று இந்திய அரசு அறிவித்ததற்கு போதுமான அடிப்படை உள்ளதா என்பதை விசாரிக்க இந்திய உயர் நீதி மன்ற நீதியரசர் திரு.பி. என். நாக் தலைமையில் இவ்வாண்டு ஜூன் மாதம் மத்திய அரசு இந்த நடுவர் மன்றத்தை அமைத்திருந்தது.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயல்பட்டதற்காக மத்திய அரசு, 1967 ஆம் ஆண்டில் சட்டவிரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்வருடம் மே 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தது.

தமிழகத்தின் சில பகுதிகளையும், இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளையும் இணைத்து தனிநாடு ஒன்றை அமைக்கும் நோக்கத்துடன் தமிழகத்தை மையமாகக் கொண்டு விடுதலைப் புலிகள் செயல்பட்டார்கள் என்றும்—

மத்திய அரசும் தமிழக அரசும் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த உறுதி மொழி ஆவணங்களில் கூறியிருந்தனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### மீட்பு நிதி சேகரிப்பு

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் இன்று தமிழீழ மீட்புநிதி சேகரிக்கப்படவிருக்கிறது.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இன்று காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரை மீட்புநிதி சேகரிக்கப் படும். (உ)

### ஹெலி நோட்டம்

வடலியடைப்பு, சுழிபுரம் பகுதிகளில் நேற்று பிற்பகல் ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

## செஞ்சிலுவை சர்வதேசக்குழுவினர் வடமராட்சிக்குச் செல்ல புதிய பாதை ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 21

ஷெல் தாக்குதலால் வல்லைப் பாலம் பலத்த சேதமடைந்ததை அடுத்து, பருத்தித்துறையில் இருந்து பொருள்களை எடுத்து வருவதற்கு மாற்றுப்பாதை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நுணாவில் — கைதடிச் சந்தியால் திரும்பும் பாதை ஊடாக மந்திகையை அடைந்து, அங்கிருந்து பருத்தித்துறைக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இனிமேல் இந்தப் பாதையைப் பாவிக்க முடிவு செய்துள்ளதாக கொழும்புக்கு தகவல் அனுப்பியுள்ளது.

இதேவேளை —

வல்லைப் பாலம் மேலும் சிதைவடைந்து வருவதால் அவ்வழி ஊடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டிருப்பதாகச் தெரிவிக்கப் படுகிறது (ஓ-3-5)

### முச்சந்தி முரளி



அப்ப...... மதில் ‘மெல்’ [illegible] லுங்கோ......!

## பிரேமாவிடமா? சிறிமாவிடமா? றொனி எந்தப் பக்கம் பாய்வார் என்பதில் குழப்பம்

கொழும்பு, டிச. 21

நாடு திரும்பியுள்ள முன்னாள் அமைச்சர் றொனி டி மெல் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பக்கம் பாய்வாரா அல்லது சிறிமாவிடம் சாய்ந்து விடுவாரா என்பதில் இப்போது குழப்பநிலை நிலவுவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

றொனி பி.பி.ஸி. செய்தியாளரிடம் கூறியதாவது:

‘‘ஐ. தே. க. அல்லது ஸ்ரீ. ல. சு. க. ஆகிய கட்சிகளின் தலைமைப்பீடங்களில் எதுவும் இதுவரை எனக்கு தமது கட்சியில் இணையுமாறு அழைப்பு விடுக்கவில்லை.

அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால், நான் அவர்களுடன் கலந்துரையாட உள்ளேன். அதேசமயம் எனது மக்களைச் சந்தித்து அவர்களது அபிப்பிராயங்களையும் கேட்டறிவேன அதன் பின்னர் எனது இறுதி முடிவைத் தெரிவிப்பேன்.

மக்களின் அபிப்பிராயம் சாதகமாக அமையாவிடின், நான் மீண்டும் லண்டன் திரும்பி விடுவேன்.’’ — என்றார்.

இதற்கிடையில் —

றொனி நாடு திரும்பியதன் பின்னணியில் பிரேமதாஸாவின் அரசியல் தேவைகள் உள்ளன என்றும்—

மார்ச் மாதத்தின் முன்னர் தேர்தல் இடம்பெறக் கூடும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் ஊர்காவல் படை மணலாறில் அரசு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 21

மணலாற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறிய சிங்களக் குடியேற்றப் பகுதிகளில் பெண்கள் ஊர்காவல் படையை ஸ்ரீலங்கா அரசு அமைத்துள்ளது.

பெண்கள் ஊர்காவல் படை முதல் முறையாக மணலாறில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எல்லைப் புறங்களில் ஆண் ஊர்காவல் படையினரும் உட்பிரதேசங்களில் பெண் ஊர்காவல் படையினரும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் படையினருக்கு 303 ரக துப்பாக்கிகளும் எஸ். எல். ஆர். ரக துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

வட - கிழக்கில் அமைக்கப் பட்டுள்ள சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்களில் மொத்தம் 14 ஆயிரத்து 470 ஊர்காவல் படையினர் சேவையிலுள்ளனர். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சோமவார விரத மகிமை, திருவிளக்குப்பூஜை, சித்திரம், சங்கீதம் மற்றும் சிவம் பாலர் வகுப்புப் புத்தகங்கள் நிதான விலையில் பெற்றுக்கொள்ள: ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (23672)

### அதிர்ஷ்டம் அழைக்கிறது

தடைப்பட்ட திருமணம் விரைவில் நிறைவேற, வெளிநாடு செல்லமுடியாமல் இடைநடுவில் நிற்பவர்களின் பிரயாணம் கைகூட சாதகத்துடன் வரவும். சாந்தி பரிகாரங்கள் கூறப்படும் ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர். (23686)

### 1992 - O/L கணிதம்

1992 O/L கணித விடைகளுடன் மயூரதி வெளியீடு, ரூ 80. 1992 கணித விடைகள் மட்டும் ரூபா 12-00. பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீகாந்தா, ஸ்ரீலங்கா, தனலக்குமி ஆகியவற்றில் கிடைக்கும். (5454)

**NEW ADMISSION FOR THE FULL-TIME**

## POST - GRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1991/92

Applications are invited for the above course from Graduate teachers of English. Applicants should be less than 50 years of age as at 1993 - 01 - 01

A graduate with English as a subject for his/her degree should have a minimum of two year's English Language Teaching experience. A graduate without English as a subject should have a minimum of four year's experience

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar/Academic after payment of fees of Rs 10/- at the Finance Branch

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test

Please forward the application through your principal to Senior Assistant Registrar, Academic Branch, University of Jaffna, Thirunelveli before 1993 - 01 - 05. The Admission Test will be held on 1993 - 01 - 15

**Registrar**
University of Jaffna.
199 - 12 - 18

C 4018

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

(21 - 12 - 1992)



### திருமதி சரஸ்வதி வேலாயுதன்

(B A London Dip. in English Dip. in Journalism
ஆங்கில போதனாசிரியர் யாழ். பல்கலைக்கழகம்
தேசிய யாழ். வேம்படி மகளிர் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை)

அம்மா! ஆற்றலின் உருவே
அன்பின் பிறப்பிடமே
பண்பின் சிகரமே
உங்கள் குளிர் நிழலில் நீண்ட நாள்
வாழ நாம் எண்ணிய கனவுகள் கலைந்து விட்டன
நீங்கள் இல்லாத வாழ்வு
ஒளியில்லாத விளக்கு, எங்களுக்கு
உங்கள் இலட்சியத்தை ஈடேற்ற எங்கள்
உயிர் உள்ளவரைக்கும் யாம் செயற்படுவோம்
உங்களின் ஆத்மா சாந்தி அடைய
என்றும் எம பிராத்தனை.

இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

பிரிந்துதுயருறும்:
**கணவன், பிள்ளைகள்.**

''கயிலை''
அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (23715)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரத்தாயின் மடியில்: — 24 06 1961

வீர மண்ணில்: 21 12 — 1985



### மேஜர் அல்பேட்

### செல்வன் கந்தையா ரூபதநிதி (ரூபன்)

ஏழு ஆண்டு காலம் ஓடி மறைந்தாலும், உங்கள் அன்பும, நினைவும் எங்கள் மனதைவிட்டு என்றென்றும் மறையாது. ஐந்தாண்டில் நீ விதைத்த போர் விதைகள் நீண்டெழுந்து வேருன்றி தமிழர் டுதலையைப் பெற்றெடுக்கும்.

தாய், தந்தை, சகோதரர்கள்,
அண்ணிமார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

அல்பேட் வீதி, அச்சுவேலி, (23702)

## நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

NAAVALAR KALVI KALAHAM

**O/L** புதிய பிரிவு (1993)

(சகல பாடங்களும்)

| | |
|---|---|
| தமிழ்: | N. ஆனந்தன் |
| | B. பைரவி |
| சமயம்: | K. ரூபி |
| வர்த்தகம்: | K. சத்தி |

(C-4009)

சுன்னாகம், கந்தரோடை

## ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய 42ஆவது ஆண்டு விழா

விளையாட்டு நிகழ்ச்சிகள்:

1. 11 பேர் கொண்ட நொக்அவுட் முறையான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி
பிரவேசம் ரூபா 60/-
2. 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட்
பிரவேசம் ரூபா 40/-
3. கரப்பந்தாட்டம் ஓவர் கேம்
பிரவேசம் ரூபா 50/-

★ விண்ணப்ப முடிவு திகதி: 31 — 12 — 1992
★ யாழ். மாவட்டக் கழகங்கள் பங்குபற்றலாம்.

- செயலாளர்.

(5463)

## பரிசளிப்பு விழா-1992

**புதிய கல்வி நிலையம்,**
219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்; 27 — 12 — 1992 ஞாயிறு
பிற்பகல் 1-00 மணி

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள்
★ அன்புடன் அழைக்கப்படுகின்றனர் ★

எமது கல்வி நிலையத்தில் கல்வி பயின்று
**1992 புலமைப் பரிசில் பரீட்சையில்**
சித்திபெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.
அவர்கள் 24—12—92இற்கு முன் பதிவு செய்யவும்.
(23711)

## 60ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி பிளொம்சம் நேசராசா

(மாதகல்)

மலர்வு: 18 — 01 — 1915
உதிர்வு: 22 — 10 — 1992

இருள் ஓடி மறையும் வண்ணம்
ஒளி பூத்த எங்கள் வாழ்வில்
ஏகிய நிலவாய்த் தோன்றி மறைந்தாய்
விழிபூத்த நிலையில் நாங்கள்
உன் நினைவால் வாடுகின்றோம்.

கணவன்: நேசராசா,
மகள்: யோகராணி,
மருமகன்: யேம்ஸ்,
சகோதரர்: இம்மனுவல் சந்திரசேகரா,
புஸ்பம் இராஜேந்திரன்,
அல்போன்சஸ் சந்திரசேகரா.

அந்தோனியார் வீதி,
மாதகல். (23695)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: 11 — 10 — 1990

உதிர்வு: 21 — 11 — 1992



### செல்வி தனுஷா குகநேசன்

ஐயைந்து திங்கள் அவனியில் அவதரித்தாய்
மின்னலென நோயுற்று மறைந்தாய்
கண்ணீர்தான் எமக்கு சொந்தம் என்றாயோ
கண்ணே தனுஷா எங்கு சென்றாய்
உன் மறு பிறப்பிற்காக நாளும்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, குடும்பத்தினர்.**

79, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (23713)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஜனாதிபதி தேர்தல் வரின்...

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் தெரிக்கின்றன. தெரிவுக்குழுவின் முடிவினால் எழுந்துள்ள குழப்பநிலை, எதிர்க் கட்சிகளிடையே நடக்கும் உள்வீட்டுச் சண்டைகள் ஆகிய இரண்டு தள நிலைமைகளையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்குப் பிரேமதாசா விரும்புவதாகக் கொழும்பில் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஆருடம் பலிக்குமா அல்லது பொய்க்குமா என்பதை எவரும் சொல்லமுடியாது. ஆனால் அரசியல் ஆய்வாளர்கள் கூறுவதில் ஒரு சாத்தியப்பாடு உண்டு.

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தம், அதன் பின்புலமாக விளங்கும் தமிழர் பிரச்சினை ஆகியவற்றை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதில் ஜனாதிபதி உளப்பூர்வமாக அக்கறை காட்டவில்லை. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு ஆர்வம் இருப்பதாக மட்டுமே வெறுமனே பாவனை செய்கிறார்!

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தனது பதவிக் காலம் முடியும்வரை அல்லது இரண்டாவது தடவையாகவும் தானே ஜனாதிபதியாகும் வாய்ப்பான இடைக்காலம் வரை தமிழர் பிரச்சினையில் தன்னையோ, தமது கட்சியையோ அவர் ஈடுபடுத்தவிரும்பவில்லை. வேண்டுமானால் தமது பதவிக் காலத்தைக் குறைவின்றி அனுபவிப்பதற்கு தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தவே அவர் விரும்பியிருந்தார்.

ஆனால் வடக்கு-கிழக்கு யுத்தத்தை அரசினால் வெல்ல முடியாது என்ற நிலை நிரந்தரமாகிவிட்டதால் பிரேமதாசாவால் தான் நினைத்ததை செய்ய முடியவில்லை. யுத்தத்தில் வென்று தமிழர் தரப்பைப் பலவீனமாக்கி, சிங்களவர்களுக்கு வாய்ப்பான தீர்வைத் திணிக்கும் சாத்தியமும் தோன்றவில்லை.

தெரிவுக்குழு என்ற பொய்க்கால் புரவி, வேண்டாம் பந்தயம் என்று பின்நோக்கி ஓடுகின்ற நிலையும், யுத்தத்தில் தமிழர் தரபபைப் பலவீனப்படுததித்தீர்வைத் திணிக்க முடியாத நிலையும் சமவேளை நிகழ்வுகளாகிவிட்டன. அதனால் அரசியலில் பிரேமதாசா எதிர்பாராத சூழ்நிலை தோன்றியுள்ளது.

ஆனால் இந்தக் குழம்பிய நிலையைத் தமக்குச் சாதகமாக்க அவர் முனைவார் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றன்று. குழம்பிய குட்டையில் மீன் பிடிபபதில் அரசியல்வாதிகள் வல்லவர்கள். பிரேமதாசாவோ மகா வல்லுநர்.

தமிழர் பிரச்சினை விவகாரத்தில், அரசியல் தீர்வு காணும் படலத்தில் தானோ தனது கட்சியோ பாத்திரப்பங்கு வகிக்காத நிலையில், தமிழர்களின் வாக்குகளை வாங்கலாம் என்று அவர் எதிர்பார்ப்பார்.

இரண்டாவது முறை ஜனாதிபதியாக வந்தால் என்னை அசைக்கமுடியாது, நான் இதனைத் தருவேன் - என்று இரகசியப் பேரங்கள் பேசி வாக்கு வாங்கவும் முயலலாம். எதற்கும், ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடக்குமானால் அதனை எவ்வாறு கருதுவது, அதில் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைத் தமிழ் மக்கள் தீர்க்கமாகவும், நிதானமாகவும் முடிவு செய்யவேண்டும். ஆழமாகச் சிந்தித்து விவேகமாகச் செயற்பட வேண்டும். ஒருவர்,

வடக்கு - கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெறாமல் எளிதில் ஜனாதிபதியாக முடியாது என்ற சிறு துரும்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வதே புத்திசாலித்தனம். தமிழர் எதிர்காலத்தைத் தக்கபடி நிர்ணயிக்க இதனை உபயோகிப்பது தமிழர் திறமையைச் சோதிப்பதாகவும் அமையும்.

# தேர்தல் நடத்த புதிய முறை; அரசு கொண்டு வருமாம்!

## ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, டிச. 21

ஏட்டிக்குப் போட்டியாகத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தாமல், பிரசார விளம்பரங்கள், பதாகைகள், சுவரொட்டிகள் இன்றி எதிர்காலத்தில் தேர்தல்களை நடத்தும் புதிய முறை ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

இத்தகவலை ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று முன்தினம் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வெளியிட்டார். (த எ)

## வடக்கு - கிழக்கில்

# மீள குடியேறும் அகதிகளுக்கு 15 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, டிச. 21

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் மீளக்குடியேறும் அகதிகளுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 15கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சு இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், வீடுகளைத் திருத்துவதற்கும் மாதாந்தம் இந்த நிதி உதவி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 9 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன அல்லது புதிய இடங்களில் குடியமர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# றொனி டி மெல்லுக்கு காமினி பாராட்டு!

## லலித் அத்துலத்முதலி ஆத்திரம்

கொழும்பு, டிச. 21

நாடு திரும்பிய முன்னாள் அமைச்சர் றொனி டி மெல்லை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா பாராட்டியிருக்கிறார்.

இது முன்னணியின் இன்னொரு சிரேஷ்ட உபதலைவரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத் முதலிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் ஆட்சியின் போது றொனி டி மெல்லுக்கும், அத்துலத்முதலிக்கும் தீவிர கருத்து வேறுபாடு நிலவியது குறிப்பிடத்தக்கது.

# உரவகைகள் வந்தன இறக்கும் பணி தாமதம்

யாழ்ப்பாணம், டிச. 21

காங்கேசன்துறைக் களஞ்சியத்தில் தேங்கிக் கிடந்த உரவகைகள் 'மெரினால்' கப்பல் மூலம் நேற்று பருத்தித் துறைக்குக் கொண்டுவரப்பட்டன. எனினும் அங்கு மிதவைப் படகு வசதியில்லாததால் உரத்தை இறக்கும் வேலைகள் நேற்று நடைபெறவில்லை.

யு. எஸ். எயிட் விவசாய திட்டத்துக்காக கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட 834 தொன் உரவகைகள் காங்கேசன்துறையில் இறக்கப்பட்டு கடந்த இரு மாதங்களாக அங்கு தேங்கிக் கிடந்தன. (உ-3)

## பாரதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டுச் செல்லவிருந்த போதுபொலீஸார் அவர்களை கைது செய்து தடுத்து வைத்தனர்.

கைதான வாஜ்பாய் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

விடுதலையான கையோடு வாஜ்பாய் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் என்று அறிவிக்கப்பட்டது.

கைதான கட்சியின் தொண்டர்கள் அனைவரையும் விடுவிக்கவேண்டும் என்றும்—

தமது கட்சியை அவமானப் படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என்றும் மத்திய அரசைக் கோரியே தாம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்ததாக அவர் சொன்னார். (உ-எ)

## புலிகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக, இலங்கை அகதிகள் என்ற பெயரில் அவர்கள் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவினார்கள் என்றும்—

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்குத் தங்கமும், ஆயுதமும் கடத்தும் சட்ட விரோதச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் இந்த ஆவணங்களில் மத்திய, மாநில அரசுகள் குறிப்பிட்டிருந்தனவாம்.

தமிழ் நாட்டு இளைஞர்களிடையே மொழி இன பிரிவினை உணர்வைத் தூண்டும் வகையில் விடுதலைப் புலிகள் செயற்பட்டார்கள் என்றும் இந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. (உ-எ)

## புதுவருட வியாபாரம்

யாழ்ப்பாணம், டிச 21

புத்தாண்டு மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ் நகரிலும் ஏனைய இடங்களிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன

அதிக எண்ணிக்கையான மக்கள் நகரில் பொருள்களையும், உடுபுடைவைகளையும் வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## 500 பொலீஸார் கடமையில்

கொழும்பு, டிச. 21

கொழும்பு மாநகரில் நத்தார் பண்டிகைக்காலத்தில் முடிச்சுமாறிகளிடம் இருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காக சுமார் 500 பொலீஸார் சாதாரண உடைகளிலும், சீருடைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (த எ)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், டிச. 21

அச்சுவேலி அபிவிருத்தி சபை காரியாலயத்தில் இன்று 21ஆம் திகதியும், தொடர்ந்து எதிர்வரும் 22, 24, 28ஆம் திகதிகளிலும் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-00 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (க-162)

## றொனி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்—

அப்போது றொனியின் சேவை பிரேமதாஸவுக்குக் கிடைக்கவில்லை என்றும் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். (உ-3)

# ஏராளமான படகுகளில் உணவுப் பொருள்கள்

ஆலங்கேணியிலிருந்து சனிக்கிழமை அதிகாலை புறப்பட்ட படகுகளில் பெரும் எண்ணிக்கையானவை உணவுப்பொருள்களைக் கிளாலி கொண்டுவந்து சேர்த்தன.

கடந்த சில நாட்களாக முற்றாகத் தடைப்பட்டிருந்த கிளாலிப் படகுச் சேவை கடந்த வெள்ளி இரவு கிளாலியிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை அதிகாலை ஆலங்கேணியிலிருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரயாணிகள் படகுச் சேவை நடைபெற்றது. ஆனால் அங்கிருந்து ஏராளமான படகுகள் உணவுப் பொருள்களை இக்கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தன, ஞாயிறு பின்னிரவிலும் ஏராளமான படகுகள் உணவுப் பொருள்களுடன் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை —

கிளாலியூடாகப் பயணம் செய்வதற்காக நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து பெரும் எண்ணிக்கையான பயணிகள் புறப்பட்டுச் சென்றனர். (அ-117-5)

# ஐ. தே. க. மாநாட்டில் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள்!

கொழும்பு, டிச 21

கொழும்பு சுகததாஸா உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஐ. தேகாவின் 38 ஆவது வருடாந்த மாநாட்டில் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த பல பிரமுகர்கள் பங்குபற்றினர்.

ஈ பி. டி பியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, புளொட்டின் அரசியல் பிரிவை சேர்ந்த சித்தார்த்தன், கரவைக் கந்தசாமி, ஈரோஸ் பிரிவைச் சேர்ந்த சங்கர் ராஜி, ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி. பி. கணேசன் ஆகியோரும்—

மற்றும் எம். எஸ். செல்லச்சாமி, எம். எச். எம். அஷ்ரப் ஒஸி அபயகுணசேகரா உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் மாநாட்டில் கலந்து கொண்டனர். (உ-எ)

# தெரிவுக் குழுவுக்கு வந்த மர்மமான திட்டம்!

கொழும்பு, டிச. 21

நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் திடீரெனத் தோன்றி ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்த திரு. ஸ்ரீநிவாசனின் செய்கை பெரும் மர்மமாகவே தோன்றுகிறது. அந்தத் திட்டமும் ஒரு மர்மமாகவே தெரிகிறது.

இவ்வாறு வர்ணிக்கிறது பி. பி. ஸி.

தெரிவுக்குழு தோல்வியில் முடிந்தது குறித்து பி. பி. ஸி' தமிழோசை நேற்று நீண்ட விமர்சனம் ஒன்றை ஒலிபரப்பியது அந்த விமர்சனத்தில் ஸ்ரீநிவாசன் திட்டம் குறித்துக் குறிப்பிடும்போது பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது:

ஸ்ரீநிவாசன் சமர்ப்பித்த திட்டத்தை அடிப்படையாக வைத்தே தெரிவுக்குழு புதிய தீர்வை வகுத்ததாக அரசாங்கப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் தமிழ்க் கட்சிகளோ, ஸ்ரீநிவாசன் அரசாங்கத்தின் கைப்பொம்மையாக இயங்கினார் என்றும் அரசாங்கத்தின் திட்டத்தையே முன் வைத்தார் என்றும் குற்றச்சாட்டுகின்றன.

ஆனால்... இப்போது லண்டனில் உள்ள திரு. ஸ்ரீநிவாசன் அதனை மறுக்கிறார். பிரஸ்தாப திட்டம் தன்னுடைய சொந்தத் திட்டம் என்கிறார். பத்து அம்சத் திட்டம் என்கிறார். 1983க்கு முன்னர் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களை நீக்கக்கூடாது என்ற தமது அம்சம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகச் சொல்கிறார். (அ-3)

# கிழக்கில் மழை ஓய்ந்தது; வெள்ளம் வடிகின்றது!

வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து பெய்த மாரி மழை ஓய்ந்துவிட்டதாக வளிமண்டல உயர் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெள்ளம் படிப்படியாக வற்றி வருகிறது. வெள்ளத்தால் வீடுகளை இழந்த பல குடும்பங்களுக்குத் தற்காலிக வசிப்பிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் திருகோணமலை மாவட்டத்தில் 125 ஏக்கர் வயல்கள் மூழ்கடிக்கப்பட்டன; 20 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன

மட்டக்களப்பில் 18 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளிலிருந்து வெளியேறியிருக்கின்றன. திருகோணமலையிலும், ஹொறவப்பொத்தானப் பகுதியிலும் 5 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்திருக்கின்றன. (த-க)

## ரூ. 300 கோடி போதைவஸ்து: இருவர் கைது

மணிலா, டிச. 21

போதைப் பொருளுடன் மணிலா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இரண்டு ஆபிரிக்கப் பிரஜைகளை பிலிப்பீன்ஸ் பொலீஸார் கைது செய்தனர்.

அவர்கள் வைத்திருந்த போதைப்பொருளின் பெறுமதி சுமார் 00 கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ

## அம்புலன்ஸ் வண்டிகளுக்கு எரிபொருள்

தென்மராட்சி, டிச. 21

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் உள்ள அம்புலன்ஸுகளுக்கு தேவையான எரிபொருள்கள் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் தற்போது வழங்கப்பட்டு வருகிறது

முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள்கள் இம்மாதம் முதல் நிறுத்தப்பட்டதால் அவசர நோயாளர்களின் பாவனைக்கென சுகாதாரத் திணைக்களம் எரிபொருளை வழங்குகின்றது. (த-117)

## புனரமைப்பு

வடமராட்சியிலுள்ள எள்ளங்குளம் பொது மயானத்தைத் திருத்தும் பணிகள் நடைபெற்றுவருகின்றன திருத்த வேலைகளை உடுப்பிட்டி ப. நோ. கூ. ச. பொறுப்பேற்றுள்ளது. (த-155)

## வாக்கெடுப்பு இன்று நடக்கும்?

புதுடில்லி, டிச. 21

இந்திரா காங்கிரஸ் அரசு மீது பாரதிய ஜனதாக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று திங்கள் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-எ)

## புலிகளின் அதிரடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார் பிரதேசத்தில் இராணுவத்தினர் தமது வலிமைக்கு அதிகமாகவே இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவது போல் தெரிகிறது. — இவ்வாறு பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. (உ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

மலிவு!! மலிவு!!

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு 01-12-1992 தொடக்கம் 31-12-1992 வரை எமது வாடிக்கையாளர்கள் சகல விதமான புடவைத் தினுசுகளையும், தைத்த ஆடைகளையும் மலிவாகவும் விசேட கழிவுடனும் பெற்றுக் கொள்ளலாம்.

**லேய்டன் புடவை நிலையம்**

இல. 249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3827)


# ராணுவ அணி தமிழகம் விரைவு

# மாநில அரசு கலைக்கப்படும்?

புதுடில்லி, டிச. 21

இந்திய இராணுவ அணி ஒன்று தமிழகத்துக்குக் கடந்த வாரம் வந்ததன் காரணமாக தமிழக அரசு பதவி நீக்கம் செய்யப்படலாம் என்ற பேச்சு மாநிலத்தில் பரவலாக அடிபடுவதாகச் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தமிழக அமைச்சர்கள் அரங்கநாயகம், கண்ணப்பன், அ. தி. மு. க. எம்.பிக்களான ஜி. சுவாமிநாதன், பி. ஜி நாராயணன் ஆகியோரடங்கிய குழு ஒன்று பிரதமர் பி. வி. நரசிம்மராவை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தியது.

அப்போது இவ்வநந்திகள் பற்றி பிரதமரிடம் அக்குழு தெரிவித்தது. பிரதமர் அக்குழுவிடம், சம்பந்தப்பட்ட இராணுவ அணி திருவனந்தபுரம் செல்லும் வழியிலேயே திருச்சிக்குச் சென்றது எனத் தெரிவித்தார் என்று தமிழக அரசு பின்னர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த எ)

## இன்று

குருநகர், டிச. 21

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிறிஸ்மஸ் ஒளி விழா நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. வில்லுப் பாட்டு, நாடகம், நடனம ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஓ-51)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிச.21

யாழ்ப்பாணம் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இன்று மாலை 4 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி ஆடுகளத்தில் சிநேகபூர்வமான உதைப்பந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறும். (உ)

## நாளை

யாழ்ப்பாணம், டிச. 21

மானிப்பாய் அசம்லி ஒவ் கோர்ட் ஆலயத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு, நத்தார் கீதங்கள், அராலி வாலிபர் நிகழ்ச்சி, சிறுவர் பரிசு நிகழ்ச்சி போன்றவை நடைபெறும். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 21

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாவின் 78 ஆவது ஜயந்தி விழாவும், சிவானந்தர் சிறுவர் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு விழாவும், யாழ். திவ்யஜீவனசங்க மண்டபத்தில் நாளை செவ்வாய் காலை 9 மணியளவில் இடம்பெறும். (ஓ)

## ஆசிரியர் பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 21

வாழ்க்கைத் திறன் கல்விப் போதனையை 1993 ஆம் ஆண்டில் தமது பாடசாலைகளில் ஆரம்பிக்கும் அதிபர்களுக்கும் அப்பாடங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்குமான பயிற்சி வகுப்பு நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் வியாழக்கிழமை வரை தினசரி காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை — யாழ். கனகரத்தினம் ம. ம. வியில் இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். (உ)

## கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம்

காரைநகர் ப. நோ. கூ. ச. கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுபவர்களின் டிசம்பர் மாத கொடுப்பனவுகள் நாளை காலை 9 மணிக்கு வழக்கம் பரையில் தற்காலிகமாக இயங்கும் மேற்படி வங்கியின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். (த)


**QUICK ENGLISH CENTRE**

P. O Box - 917
Karaveddy West

ஆண்டு 6 — 11 வரை

ஆங்கிலமும் விஞ்ஞானமும் கற்பிக்கப்படும்.

அனுமதி — 03 - 01 1993
ஞாயிறு 9. a m.

Director.

(23716)


## சுவாமிக்குப் பாதுகாப்பு; தமிழக அரசு சீற்றம்!

பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்த அ. தி. மு. க. எம். பிகள் அடங்கிய குழு ஜனதாத் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு இந்திய மத்திய அரசினால் அளிக்கப்படும் பாதுகாப்புப் பற்றி பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் உயிருக்கும் ஆபத்து இருந்தால் அவருக்குப் பிரதமரின் அலுவலகம் அளிக்கும் பாதுகாப்பைப் போலவே டாக்டர் சுப்பிரமணியம் சுவாமிக்கும் அளிக்கப்படுகிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

டாக்டர் சுவாமி வெளியிடும் கருத்துக்கள் அவரின் சொந்தக் கருத்துகள் என்றும்- அவருக்குத் தான் ஆதரவு அளிக்கவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

அ. தி. மு. க.-காங்கிரஸ் கூட்டணி வருங்காலத்திலும் தொடர வேண்டும் என்றும், இக்கூட்டணி மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் எனத் தாம் விரும்புவதாகவும் பிரதமர் அ.தி மு.க. குழுவிடம் தெரிவித்தார். (த-எ)

## புதுடில்லியில் பதற்றம்

புதுடில்லி, டிச. 21

தடை உத்தரவை மீறி புதுடில்லியில் பாரதீய ஜனதா கட்சி ஒழுங்கு செய்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற மக்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுப் பிரயோகம் செய்ததுடன் தடியடிப் பிரயோகமும் நடத்தினர்.

பதிலுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸார் மீது கற்கள் வீசினர் என்றும், பஸ்களை தீவைத்துக் கொளுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிய போதும் நேறு இருளும் வரை புதுடில்லி வீதிகளில் கூடியிருந்த பாரதீய ஜனதாக் கட்சித் தொண்டர்கள் கலைந்து செல்லவில்லை என்றும்—

அப்பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ எ-3)

# பாரதீய ஜனதாவும் தடை செய்யப்படும்?

புதுடில்லி, டிச. 21

புதுடில்லியில் இடம்பெற்று வரும் அரசியல் நெருக்கடிகளை அடுத்து பாரதீய ஜனதாக் கட்சிக்கும் தடை விதிக்கப்படலாம் என்று பரவலாகப் பேச்சு அடிபடுகிறது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஒரு சாரார் பாரதீய ஜனதாவுக்கும் தடை விதிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி வருகிறார்களாம்.

தடை விதிக்கப்பட்டிருக்கும் ஆர். எஸ். எஸ்., விஷ்வ ஹிந்து பரிஷத் முதலிய அமைப்புகள் போன்றே மத வெறியைத் தூண்டும் செயல்களில் பாரதீய ஜனதா ஈடுபட்டிருக்கிறது என்றும்—

அந்த அமைப்புகளைத் தடை செய்த அதே காரணங்களைக் காட்டி அக்கட்சியையும் தடை செய்யவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். (உ-3)

## வீதித் தடை முகாம்கள் மட்டக்களப்பில் குறைப்பு!

கொழும்பு, டிச 21

மட்டக்களப்பு நகரில் பொலீஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வீதித்தடை சோதனை நிலையங்கள் கடந்த வெள்ளி முதல் குறைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கல்லடிப் பாலத்திலும் கல்லடியிலும் இருந்து வந்த சோதனை நிலையங்கள் அகற்றப்பட்டன. அவற்றுக்குப் பதிலாக கல்லடி சரவணை வீதிச் சந்தியில் மட்டும் புதிய சோதனை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (த-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி றோமான் யோசேப்பின்

காலஞ்சென்ற இறப்பியேல் மனவல் - மாகிறெற் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் றோமானின் அன்பு மனைவியும், யூடா இம்மகுலேற், கிறிஸ்ரியன் (பிரான்ஸ்), அன்ரன், இராயப்பு லூர்த்து நாயகி, கில்பேட், ஒலிவர் (மாநகரசபை), அன்ரனி (கிராமசேவை அலுவலர் J/69), பீலிக்ஸ் ஜெயசிலி, ஸ்ரனிஸ்லோஸ் (நோர்வே), டயஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமான றோமான் யோசேப்பின் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக (21-12-1992) இன்று திங்கட்கிழமை பி. ப. 3 30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
றோமான் அன்ரனி
கிராமசேவை அலுவலர்
குருநகர்

10, அடப்பன் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

## சுப்பிரமணியம் காங்கேசு

(வேலணை கிழக்கு - பிரபல விவசாயி)

வேலணை கிழக்கு அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கு, ஆடிய பாதம் வீதியில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் காங்கேசு 20-12-1992ஆம் திகதி சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களாகிய சுப்பிரமணியம்-தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல்முத்து ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மற்றும் இராஜேஸ்வரி (சுவிஸ்), இராஜலெட்சுமி, மகாலெட்சுமி, சிவராசா, தங்கலெட்சுமி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு (சுவிஸ்), தர்மபாலன் (உரிமையாளர், சுந்தரம் ஸ்ரோர், மாங்குளம்), கோபால பிள்ளை, அருட்செல்வி, இராஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் —

காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னராசா, செல்லத்துரை, இளையபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் பூமணியின் மைத்துனரும், திருமதி யோகரெட்ணம், ஸ்ரீகலா (சுவிஸ்), திருமாறன் (சுவிஸ்), றதிகலா (சுவிஸ்), திருவானந்தன் (சுவிஸ்), தவநிதி (சுவிஸ்), தர்சினி, ராசினி, கஜேந்திரன், கவிதா, ஜெயந்தி, ஜெயகுமார் (ஜேர்மனி), ஜெயசுதா, ஜெயசங்கர் (ஜேர்மனி), பிரதீபன், மணிதீபன், துவராகி, சிவசுதன், கௌசிகா, றேணுகா (கனடா), தனுசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் நிதர்சன் (சுவிஸ்), நிசாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-1 -1992 (இன்று) திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1-00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
த. சிதம்பரநாதன் (மருமகன்)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
(கொக்குவில் சந்திக்கு அண்மையில்)

(23714)

## பிலிப்புப்பிள்ளை மரியாம்பிள்ளை

கரம்பனைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை மரியாம்பிள்ளை காலமாகி விட்டார். இவர் மெக்ரலீனின் (முத்தம்மா) அன்புக் கணவரும், நிர்மலாவின் அன்புத் தந்தையும், குணசீலனின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (21-12-92) பிற்பகல் 2 மணியளவில், சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினருக்கு அறிபத்தருகிறோம்.

தகவல்:
பி. சந்தியாப்பிள்ளை

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(23718)

## முதலாவது வருட நினைவஞ்சலி



**அமரர் முத்தம்மா பொன்னம்பலம்**

இம்மைக்குள்; 18 — 10 — 1892
மறுமைக்குள்: 21 — 12 — 1991

அன்பின் பிறப்பிடமாய், எங்கள் குடும்ப ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய், செயற்திறன் மிக்கவராய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

- குடும்பத்தினர்.

21, இராஜ வீதி,
நல்லூர்.

(சி-4020)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org